# மரபுக்கவிதை வடிவங்களில் கட்டளைக் கலித்துறையின் தனித்துவம்

**முனைவர் ப.செந்தில் முருகன்**

**முன்னுரை**

பல்வேறு செவ்வியல் இலக்கியங்களையும் இலக்கணக்கூறுகளையும் தன்னகத்தே உள்ளடக்கிய செம்மொழியான தமிழ்மொழியின் தொன்மை நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தின் பொருளதிகாரச் செய்யுளியல் யாப்பிலக்கணத்தின் வரையறைகளை எடுத்தியம்புகிறது. அதன் தொடர்ச்சியாக அடுத்தடுத்த காலக்கட்டங்களில் உருவான இலக்கண நூல்களுள் அமிதசாகரர் இயற்றிய யாப்பருங்கலமும் யாப்பருங்கலக்காரிகையும் யாப்பிலக்கணத்திற்கு இன்றும் மகுடங்களாகத் திகழ்கின்றன. தொல்காப்பியக் காலத்திற்குப் பின்னர் தோன்றிய யாப்பிலக்கண நூல்களான காக்கைபாடினியம், அவிநயம், பல்காயம் போன்றவற்றின் மரபுகளையும் உள்ளடக்கி விளங்கும் யாப்பருங்கலக்காரிகையானது வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனும் நாற்பாவிற்கும் இனங்களாகப் பன்னிரெண்டு பாவினங்களைத் தெளிவுபடுத்துகிறது. அவையானவை

**வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம்**
**ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம்**
**கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம்**
**வஞ்சித்தாழிசை, வஞ்சிதுறை, வஞ்சி விருத்தம்**

என்பனவாகும். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பாவிற்கெனக் கூறப்படும் பொதுவிலக்கணங்களில் ஏதேனும் பிறழ்வு ஏற்படும் நிலையை உள்ளடக்கி இப்பாவினங்கள் அமைந்துள்ளன.

பெரும்பாலும் நாற்பாக்களும் தத்தம் இயல்புநிலை திரிதலால் உருவெடுப்பது பாவினங்கள் என்பதால் நாற்பாக்களே யாப்புலகில் முக்கிய இடம் வகிக்கின்றன. ஆனால் கலிப்பாவின் இனங்களுள் ஒன்றான கலித்துறையின் ஓர் அங்கமாகப் பிற்காலத்தில் முகிழ்ந்தது கட்டளைக் கலித்துறை. இக்கட்டளைக் கலித்துறை மற்றைய பாவினங்களிலிருந்து வேறுபட்டு இலக்கண வரையறையில் கடினத்தன்மை கொண்டதாகவுள்ளது. இக்கட்டளைக் கலித்துறையானது எத்தகு இலக்கண விதிமுறைகளைக் கொண்டுள்ளது என்ற வினாவினை யாப்பியல் அறிஞர்களிடம் முன் வைக்கும் போது பெரும்பாலும் **அடியடிதோறும் ஐஞ்சீராகி** எனத் தொடங்கும் நூற்பா ஒன்றினை மட்டுமே எடுத்துரைக்கின்றனர். அந்நூற்பாவும் யாப்பருங்கலக்காரிகையின் உரை நூலில் இடம்பெற்ற மேற்கோள் நூற்பா என்றே அறியப்படுகின்றது. மிகச் சரியாக

எந்த நூலின்கண் அந்நூற்பா இடம்பெற்றுள்ளது என்பதில் கூட தெளிவற்ற குழப்ப நிலையே நீடிக்கிறது.

இக்கட்டளைக் கலித்துறையானது வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா போன்ற மரபுக் கவிதை வடிவங்களின் பொதுவிலக்கணத்தை விட எளிமையானதாக உள்ளதா அவற்றிற்கிணையாக உள்ளதா அல்லது நாற்பாவின் பொதுவிலக்கணத்தையும் விஞ்சி நிற்கிறதா என்பதை நாற்பாக்களோடும் ஒப்பிட்டு ஆய்வதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

## சீர் ஒப்பீடு

புலவர்க்கு வெண்பா புலி என்று தமிழ் உலகில் போற்றப்படும் வெண்பாவிலும், சங்க இலக்கியங்களில் அதிக ஆட்சி பெற்ற ஆசிரியப்பாவிலும் மாச்சீர், விளச்சீர் மற்றும் காய்ச்சீர் பெறலாம். ஆனால் கனிச்சீரும், நாலசைச்சீரும் இடம்பெறாக் கூடாது. கலிப்பாவில் கருவிளம், கருவிளங்காய், புளிமாங்காய் இடம்பெறுதல் சிறப்பாகக் கருதப்படும். தேமாங்காய், கூவிளங்காய்ச் சீர்களும் கனிச்சீர்களும் சில இடங்களில் மட்டுமே இடம் பெறலாகின்றது. அங்ஙனம் கனிச்சீர்கள் வந்தாலும் அவை தேமாங்கனி, புளிமாங்கனி சீராகவே அமைய வேண்டும். கூவிளங்கனி, கருவிளங்கனிச் சீர்கள் இடம் பெறக்கூடாது. ஆயினும் கொச்சகக் கலிப்பாக்கள் இவற்றில் விதிவிலக்கும் பெறுகின்றன. வஞ்சிப்பாவானது கனிச்சீர்கள் மற்றும் பொதுச்சீர்களுள் நிழற்சீரும் பெற்று வருதல் உண்டு. ஏனைய சீர்களான இயற்சீர், காய்ச்சீர் பெறுதல் சிறப்பின்மையே. ஆனால் கட்டளைக் கலித்துறையானது வெண்பா, ஆசிரியப்பா போன்றே மாச்சீர், விளச்சீர் மற்றும் காய்ச்சீர்கள் மட்டுமே பெற்று வந்தாலும் ஒவ்வோரடியின் ஈற்றுச்சீரும் கூவிளங்காயாகவோ, கருவிளங்காயாகவோ மட்டுமே அமைதல் வேண்டும் என்ற இலக்கண வரையறை பெற்றுள்ளதால் நாற்பாக்களைக் காட்டிலும் கட்டளைக்கலித்துறையில் சீர்க்கட்டுக்கோப்பு வலுபெறுகிறது.

## தளை ஒப்பீடு

தளை பெறுவதில் அதிக கட்டுக்கோப்புகளை உடையதாகத் திகழ்வது யாதென ஆய்ந்தால் வெண்பாவில் எவ்விடத்திலும் வெண்டளையே விரவி வருதல் வேண்டுமென்ற கட்டுக்கோப்புடன் அமைந்துள்ளது. ஆசிரியப்பாவானது நேரொன்றாசிரியத்தளை **(மா முன் நேர்)** அல்லது நிரையொன்றாசிரியத்தளை **(விள முன் நிரை)** பெற்றுத் திகழ்தல் சிறப்புக்குரியன எனினும் ஏனைய தளைகளையும் பெறலாம். கலிப்பாவானது கலித்தளை **(காய் முன் நிரை)** பெற்று வருதல் சிறப்புக்குரியன எனினும் ஏனைய தளைகளையும்

பெறலாம். வஞ்சிப்பாவானது ஒன்றியவஞ்சித்தளை **(கனி முன் நிரை)** அல்லது ஒன்றாவஞ்சித்தளை **(கனி முன் நேர்)** பெற்றுத் திகழ்தல் சிறப்புக்குரியன எனினும் ஏனைய தளைகளையும் பெறலாம். தளை பெறுவதில் அதிக கட்டுக்கோப்புகளை உடையதாக வெண்பா திகழ்ந்தாலும் ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியன பெரும் கட்டுப்பாடு கொண்ட இலக்கண வரையறையுடன் காணப்படவில்லை.

ஆனால் கட்டளைக் கலித்துறையில் ஒவ்வொரு அடியின் ஈற்றுச்சீருக்கும் அடுத்த அடியின் முதற்சீருக்கும் தளை இவ்வாறுதான் அமைதல் வேண்டுமென்பதில்லை. எனினும் ஏனைய இடங்களில் கட்டளைக் கலித்துறையானது வெண்பாவைப் போன்று வெண்டளை மட்டுமே விரவி வருதல் வேண்டும் என்ற இலக்கண வரையறை பெற்றுள்ளதால் ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியவற்றை காட்டிலும் கட்டளைக்கலித்துறையில் தளை கட்டுக்கோப்பு வலுபெறுகிறது.

## அடி ஒப்பீடு

வெண்பாவானது ஈற்றடி சிந்தடியாகவும் ஏனைய அடிகள் அளவடியாகவும் அமைதல் வேண்டும். குறள் வெண்பாவாக அமையும் போது ஈரடிகளையும், சிந்தியல் வெண்பாவாக அமையும் போது மூவடிகளையும், நேரிசை மற்றும் இன்னிசை வெண்பாவாக அமையும் போது நான்கடிகளையும், பஃறொடை வெண்பாவாக அமையும் போது நான்கடிக்கு மேற்பட்டு பன்னிரு அடிகளுக்குட்பட்டும் அமைகிறது.

ஆசிரியப்பாவானது, இணைகுறள் ஆசிரியப்பாவாக அமையும் போது குறளடியும் சிந்தடியும் அளவடியும் கலந்து இடம்பெறலாம். ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் கூறுவதன் அடிப்படையில் ஈற்றயலடி முச்சீர் பெறுதல் வேண்டுமாயினும் நிலைமண்டில ஆசிரியப்பாக்கள் அடிதோறும் நாற்சீர்களைப் பெற்று அமையும் தன்மை கொண்டு, விதிவிலக்கும் பெற்றுள்ளது.

கலிப்பாவிற்கு நான்கு சீர்களாலான அளவடிகளே உரியவை. வெண்பா, ஆசிரியப்பாக்களைப் போல் அல்லாமல் கலிப்பா பொருளின் போக்கிற்கு ஏற்றபடி பல உறுப்புகளைப் பெற்று வரும் தன்மை கொண்டது. மேலும் கலிப்பாவானது நேரிசை ஆசிரிய சுரிதகம் கொண்டு முடியும் போது ஈற்றயலடி சிந்தடியாகவும் வெள்ளை சுரிதகம் கொண்டு முடியும் போது ஈற்றடி சிந்தடியாகவும் அமையும். இடையே தனிச்சொல் பெறுவது வழக்கு.

குறளடி வஞ்சிப்பாக்கள் அடிதோறும் இருசீர்களைப் பெற்று அமையும். சிந்தடி வஞ்சிப்பாக்கள் அடிதோறும் முச்சீர்களைப் பெற்று அமையும். வஞ்சிப்பாவானது

ஈற்றயலடி சிந்தடியாகவும் ஈற்றடி அளவடியாகவும் கொண்ட ஆசிரிய சுரிதகத்தால் அமைதல் வேண்டும். அவ்வாறெனில் வஞ்சிப்பாக்களில் குறளடி, சிந்தடி, அளவடி ஆகியன இடம்பெறுகின்றன.

இதனால் வெண்பா வழி பாடுபொருளை உணர்த்த கருதுவோர் இரண்டு முதல் பன்னிரு அடிகள் வரை பயன்படுத்தியும் ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா வழி பாடுபொருளை உணர்த்த கருதுவோர், குறைந்த அளவு மூன்று அடிகள் முதல், அதிகளவு எல்லையின்றி உரைப்போரின் உள்ள கிடக்கினை அடிப்படையாகக் கொண்டும் பாடுபொருளை வழங்கலாம். ஆனால் கட்டளைக் கலித்துறையானது நெடிலடி நான்கு மட்டுமே கொண்டு இயற்றப்பட வேண்டுமாதலால் குறுகிய கருத்துடைய செய்தியினை இரண்டு அல்லது மூன்றடிகளிலோ அதிக கருத்துடைய செய்தியினை நான்கடிக்கு மேற்பட்டோ இயற்ற முடியாது. இத்தகு இலக்கண வரையறை பெற்றுள்ளதால் நாற்பாக்களைக் காட்டிலும் கட்டளைக்கலித்துறையில் அடி எனும் யாப்புறுப்பின் கட்டுக்கோப்பு வலுபெறுகிறது.

## தொடை ஒப்பீடு

வெண்பாவில் பயின்று வரும் எதுகையானது மரபுவழிப்பட்டதே என்பதும் குறள் வெண்பாவாக இடம்பெறும் போதும், இன்னிசை வெண்பாவாக வரும்போதும், பஃறொடை வெண்பாவாயினும் எதுகை பெறும் முறையில் தளர்வு உண்டாகிறது. மேலும் மற்றைய வெண்பா வகையிலுள் ஒரு விகற்பமோ இரு விகற்பமோ பெற்று வருதலுண்டு. எண்வகையான தொடைகளில் ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியன இந்தந்த தொடைகளை மட்டுமே பெற வேண்டும் என்ற இலக்கண விதிகளோ மரபுகளோ இல்லை. வஞ்சிப்பாவிற்கு மட்டும் பிற்கால இலக்கணிகள் இரண்டடிக்கு ஓர் எதுகை பெறுதல் நலம் என இலக்கணம் உரைத்துள்ளதையும், தண்டபாணி சுவாமிகள் அறுவகை இலக்கணத்தின் வழி, வஞ்சிப்பா என்பது மோனை, எதுகை பெறலாம் என இலக்கணம் உரைப்பதையும் அறிய முடிகிறது.

ஆனால் கட்டளைக் கலித்துறையானது எதுகைத்தொடை கொண்டு மட்டுமே அமைதல் வேண்டும் என்ற இலக்கண வரையறையைக் கொண்டு திகழ்கிறது. எனவே தொடை இலக்கண வரையறையிலும் கட்டளைக் கலித்துறையானது நாற்பாக்களை விட உயரிய கட்டுக்கோப்பினை உடையது என்பது தெளிவாகின்றது.

### ஈற்றுச்சீர் ஒப்பீடு

வெண்பாவின் ஈற்றுச்சீரானது நேர் – நாள், நிரை – மலர், நேர்பு – காசு, நிரைபு – பிறப்பு உள்ளிட்ட நான்கினுள் ஒன்றினைப் பெற்று முடியலாம். ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீரானது பெரும்பாலும் ஏகாரத்தினைக் கொண்டும் சிறுபான்மை ஓ, ஆ, ஆய், என், ஐ ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொண்டும் முடியலாம். கலிப்பாவின் ஈற்றில் ஆசிரிய சுரிதகமாக முடியும் போது பெரும்பாலும் ஏகார ஈற்றினைக் கொண்டு முடிவதையே காண முடிகிறது. வெள்ளை சுரிதகமாக முடியும் போதும், வெண்கலிப்பா வகையிலும் வெண்பாவிற்கான ஈற்றுச்சீர் போன்று ஓரசைச்சீர் கொண்டு முடிகின்றது. கொச்சகக் கலிப்பா வகைகள் சுரிதகம் இன்றியும் முடியலாம் என்பதால் ஈற்றுச்சீர் வரையறையில் விலக்குப் பெறுகிறது. வஞ்சிப்பா ஈற்றில் அகவற் சுரிதகமே பெறும் என்பதால் ஏகாரத்தினைக் கொண்டு முடிவதைக் காணலாம். இவ்விதியே குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா எனும் வஞ்சிப்பாவின் இருவகைகளுக்கும் பொருந்துகிறது.

ஆனால் கட்டளைக் கலித்துறையானது ஏகாரத்தில் முடிய வேண்டுமெனும் ஒரே இலக்கண வரையறையை மட்டுமே கொண்டு நெகிழ்வுத் தன்மையின்றி காணப்படுகிறது. ஈற்றுச்சீர் பெறுவதில் வஞ்சிப்பா தவிர்த்து ஏனையவற்றில் கட்டளைக் கலித்துறையே நெகிழ்வற்ற கட்டுக்கோப்புடன் இலக்கண வரையறை பெற்றுள்ளது என்பது யாப்பிலக்கண போக்கில் புலனாகிறது.

### ஏனைய விதிகள் ஒப்பீடு

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியன எழுத்தெண்ணும் இலக்கண வரையறை பெறவில்லை. ஆனால் கட்டளைக் கலித்துறையின் இன்றியமையா விதியாக எழுத்தெண்ணி பாடும் இலக்கணக் கட்டுக்கோப்பு அமைந்துள்ளது. கட்டளைக் கலித்துறையின் அடியானது முதற்சீர் நேரசையில் தொடங்கினால் அவ்வடி ஒற்று நீங்கலாகப் பதினாறு எழுத்தும் நிரையசையில் தொடங்கினால் அவ்வடி ஒற்று நீங்கலாகப் பதினேழு எழுத்தும் பெறுதல் கட்டளையாகும். இத்தகு எழுத்தெண்ணும் முறையே கட்டளைக் கலித்துறையின் அரும்பெரும் சிறப்பும், கட்டுக்கோப்புமெனில் அது மிகையாகா.

எனவே நாற்பாக்களை விட கட்டளைக் கலித்துறையின் சீரிய கட்டுக்கோப்பு இதன் மூலம் மேலும் வலுபெறுகிறது.

**சான்றுகள்**

**மின்னும்தார் வீமன்தன் மெய்மரபில் செம்மைசேர்**
**கன்னியான் ஆகில் கடிமாலை - அன்னம்தான்**
**சொன்னவனை சூட்ட அருளென்றாள் சூழ்விதியின்**
**மன்னவனைத் தன்மனத்தே வைத்து.**

மேற்கண்ட பாடல், ஒரு விகற்பம் கொண்ட நேரிசை வெண்பா ஆகும். இதில் அமைந்துள்ள பதினைந்து சீர்களில் இரண்டாமடியில் உள்ள கன்னியான், ஆகில் என்பதையும் மூன்றாமடியில் உள்ள சூட்ட எனும் சீர், இவை மட்டுமே இயற்சீர்கள். ஈற்றுச்சீர் தவித்து ஏனையவை அனைத்தும் காய்ச்சீர்களாகும். மேலும் ஒவ்வொரு சீருக்கும் இடையே வெண்டளை மட்டுமே விரவி வருதலையும் ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் அமைதலையும், அனைத்து அடிகளும் எதுகைத் தொடை மட்டுமே ஒன்றி வருதலையும், ஈற்றுச்சீரானது ஓரசைச்சீராக நாள், மலர், காசு, பிறப்பு எனும் வாய்பாடுகளுள் ஒன்றினை மட்டுமே பெற்று வருதலையும், எழுத்தெண்ணும் மரபுக்கு ஆட்படாமையையும் அறியலாம்.

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர்அள வின்றே – சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே. ( குறு.தொ. பா.3)**

மேற்கண்ட பாடல் நேரிசை ஆசிரியப்பா ஆகும். இதில் அமைந்துள்ள பதினைந்து சீர்களில் உயர்ந்தன்று, குறிஞ்சிப்பூ, நாடனொடு, எனும் சீர்கள் மட்டுமே காய்ச்சீர்களாகும் ஏனையவை அனைத்தும் இயற்சீர்களாகும். ஒவ்வொரு சீருக்கும் இடையில் உள்ள தளைகளை ஆய்ந்தால் நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, போன்றவை கலந்து காணப்படுதலை உணரலாம். மேலும் ஈற்றயலடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் அமைதலையும், முதல் இரண்டு அடிகளில் மோனைத் தொடைகள் அடுத்த இரண்டு அடிகளில் எதுகைத் தொடைகள் ஒன்றி வருதலையும், ஈற்றுச்சீரானது ஏகாரத்தில் அமைவது சிறப்பு எனும் விதிக்கேற்ப **நட்பே** என ஏகாரம் பெற்று வருதலையும் எழுத்தெண்ணும் மரபுக்கு ஆட்படாமையையும் அறியலாம்.

**வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றாய்த்திரிந்து**
**தோணெடுந்தண் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்**
**பூணொடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ**

**சூருடைய நெடுங்கடங்கள் சொலற்கரிய யென்பவால்**
**பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே!**

**சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய யென்பவால்**
**நாணுடைய நலந்தொலைய நடப்பாரே நயமிலரே!**

**சிலம்படைந்த வெங்கானஞ் சீரிலவே யென்பவால்**
**புலம்படைத்த நலந்தொலையப் போவாரோ பொருளிலரே!**
**எனவாங்கு**
**அருளேனு மிலராய்ப் பொருள்வயின் பிரிவோர்**
**பன்னெடுங் காலமும் வாழியர்**
**பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே.**

மேற்கண்ட நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவில் இடம்பெற்றுள்ள தரவு என்னும் உறுப்பில் இடம்பெற்றுள்ள பனிரெண்டு சீர்களில் ஈற்றுச்சீர் தவிர்த்து ஏனைய சீர்கள் காய்ச்சீராகவும் ஈற்றுச்சீர் இயற்சீராகவும் அமைதலைக் காணலாம். அதேபோன்று தரவினை அடுத்து இடம்பெறும் மூன்று தாழிசைகளிலும் தாழிசைக்கு எட்டு சீர்களென இருபத்து நான்கு சீர்களிலும் இயற்சீரும் காய்ச்சீரும் அமைதலைக் காணலாம். தனிச்சொல்லும் காய்ச்சீராகவே அமைதலை இப்பாடலில் காணலாம். அதன்பின் வரும் சுரிதமானது அகவற் சுரிதகம் என்பதால் அஃது ஆசிரியப்பாவிற்கான இலக்கண வரையறை கொண்டே அமையும் என்பது வெளிப்படை.

மேற்கண்ட பாடலில் உள்ளவாறு மட்டுமே அமைதல் வேண்டும் என்பதில்லை கனிச்சீரும் அருகி இடம்பெறலாம். அவ்வாறு கனிச்சீர் அமைந்தால் கூவிளங்கனி, கருவிளங்கனிச் சீரைத் தவிர்த்த கனிச்சீராக மட்டுமே அமைதல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. தளைகளுள் கலித்தளை பெற்று வருவது கலிப்பாவின் சிறப்பு எனினும் பிற தளைகளும் பெற்று வருதலை காணலாம். தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் எனும் கலிப்பாவிற்குரிய உறுப்புகளைப் பெற்று வருதலையும், தொடை வரையறை பெறாது செய்யுள் அமைதலையும் எழுத்தெண்ணும் மரபுக்கு ஆட்படாமையையும் அறியலாம்.

**மொழிவரையறை வரப்பாகவும்**
**விழிமொழியதன் இமையாகவும்**
**நல்லதொருசீர் விளங்குவேலியாந்**
**தொல்காப்பியம் நமதுமொழியாம்**
**தமிழெனும்மொழிக் கெனக்கிடைத்ததோர்**
**அமிழ்தமெனவும் உயிருடலுறை**

**எனவாங்கு**

**முரசு கொட்டி முழக்கிப்**

**பறையைச் சாற்றுவோம் பாரினில் எங்குமே! ( யாப்பரங்கம் .ப.133)**

மேற்கண்ட குறளடி வஞ்சிப்பாவில் இடம்பெற்றுள்ள இருபது சீர்களில் தனிச்சொல் மற்றும் தனிச்சொல்லினை அடுத்துவரும் இரண்டடி அகவற் சுரிதகம் தவிர்த்து ஏனைய அடியில் உள்ள சீர்கள் அனைத்தும் கனிச்சீராக மட்டுமே அமைதலைக் காணலாம். தனிச்சொல்லானது இயற்சீர், காய்ச்சீர் என எவ்வகையிலும் அமையலாம். அதனைத் தொடர்ந்து வரும் சுரிதகம் ஆசிரிய சுரிதகம் என்பதால் மாச்சீர், விளச்சீர் அடங்கிய இயற்சீர் பெற்று வருதலைக் காணலாம். இப்பாடலானது வஞ்சித் தளைகளைப் பெற்று வரினும் சுரிதகத்தில் விலக்குப் பெறுவதை உணரலாம். குறளடி வஞ்சிப்பா என்பதால் அடிதோறும் இரு சீர்களையும் எட்டு அடிகளையும் பெற்று வந்துள்ளது நோக்கத்தக்கது. ஆயினும் அடி எண்ணிக்கை பெறுதலில் வஞ்சிப்பாவிற்கு வரையறை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா போன்றே வஞ்சிப்பாவும் எழுத்தெண்ணும் மரபுக்கு ஆட்படாமையை காணலாம்.

**மயிலே மடப்பிடி யேகொடி யேஇள மான்பிணையே**

**குயிலே பசுங்கிளி யேஅன்ன மேமனக் கூர்இருட்கோர்**

**வெயிலே நிலவெழும் மேனிமின் னேஇனி வேறுதவம்**

**பயிலேன் மகிழ்ந்து பணிவேன் உனதுபொற் பாதங்களே.**

இக்கட்டளைக் கலித்துறையில் உள்ள இருபது சீர்களில் ஈற்றுச்சீர் தவிர்த்து ஏனையவை இயற்சீராகவோ அல்லது உரிச்சீராகவோ மட்டுமே அமைதலைக் காணலாம். அவ்வாறு மூவசைச்சீராக அமைந்தாலும் அவை கனிச்சீரைத் தவிர்த்த காய்ச்சீராக மட்டுமே அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. அதனுள்ளும் ஒவ்வோர் அடியின் ஈற்றுச்சீரும் கூவிளங்காயாகவோ, கருவிளங்காயாகவோ மட்டுமே அமைதலைக் காணலாம். மேலும் ஒவ்வோரடியின் ஈற்றுச்சீரையும் அடுத்த அடியின் முதற்சீரையும் தவிர்த்து ஏனைய இடங்கள் யாவும் வெண்டளை மட்டுமே விரவி வருதலைக் காணலாம். ஒவ்வோரடியும் ஐஞ்சீர் கொண்ட நெடிலடிகளாக மட்டுமே அமைதலையும், அனைத்து அடிகளும் ஒரே எதுகைத்தொடை மட்டுமே பெற்றுத் திகழ்தலையும் உணரலாம். மேலும் ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் மட்டுமே முடிய வேண்டுமென்ற இலக்கண வரையறைக்கும் பொருந்தி நிற்பது வெள்ளிடை மலை. இவையனைத்திற்கும் மேலாக நிரையசையில் தொடங்கும் பாடல் என்பதால் அடிதோறும் ஒற்று நீங்கலாக 17 எழுத்துகளை மட்டுமே பெற்று வரும் சீரிய கட்டுக்கோப்பினையும் காண முடிகிறது.

### முடிவுரை

கட்டளைக் கலித்துறையின் வடிவம் என்பது வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நாற்பாக்களின் பொது இலக்கணத்தையும்விடச் சிறப்பாகவும் கடினப் போக்குடனும் அமைந்துள்ளது. இதன் காரணமாகக் கட்டளைக் கலித்துறையைப் பாவினமாகக் கொள்ளாமல் பாவகையாகக் கொள்ள வேண்டும் என்ற இவ்வாய்வின் கருதுகோள் மெய்ப்பிக்கப்படுகிறது.

ஆயினும் பா என்பது கலம் போன்றது. ஒவ்வொரு கலமும் எவ்வாறு தனது உருவில் மாற்றம் பெற்றுள்ளதோ அவ்வாறே அதனுள் அடக்கும் திரவப் பொருளும் மாறுபடும். பா என்பது கலமாகவும் யாப்பு என்பது அதனுள் நிரப்பும் திரவப் பொருள் போன்றதாகவும் கொண்டால் அவையவை அவற்றிற்கான வடிவே பெறும் என்பது திண்ணம்.

### மேற்கோள் நூல்கள்

1. இராகவையங்கார்.இரா., குறுந்தொகை மூலமும் விளக்கமும், சாரதா பதிப்பகம், சென்னை - 2016
2. இராஜகோபாலச்சாரியார்.கே, எளிய நடையில் தமிழ் இலக்கணம், கண்ணப்பன் பதிப்பகம்,சென்னை-2021
3. கந்தசாமி.சோ.ந.,தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்,தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
4. பவானந்தம் பிள்ளை,(ப.ஆ), யாப்பருங்கல விருத்தியுரை, லாங்மேன் கீரீன்ஸ் அச்சகம்,சென்னை-1916
5. பாலையன்.அ.ப., (உ.ஆ) நளவெண்பா மூலமும் உரையும்,சாரதா பதிப்பகம், சென்னை - 2018
6. மணிகண்டன்.யா(நூ.ஆ), தமிழ் யாப்பிலக்கண வரலாறும் வளர்ச்சியும், காலச்சுவடு பதிப்பகம், சென்னை-2017
7. ………………., சி.வை.தாமோதரம் பிள்ளை இயற்றிய கட்டளைக் கலித்துறை, பாரதி புத்தகாலயம், சென்னை-2014
8. வெற்றியழகன்.புலவர், யாப்பரங்கம்,சீதை பதிப்பகம்,சென்னை -2008
9. வேங்கடசாமி. மயிலை சீனி., மறைந்து போன தமிழ் நூல்கள், நாம் தமிழர் பதிப்பகம்,சென்னை - 2013